DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**OS.No. 6 /2016**

D.W.1 சாரதா பிரியா த/பெ. நடராஜன் நாள் – 21.02.2023

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் இவ்வழக்கில் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். என் தாயார் 1ம் பிரதிவாதி ராஜம்மாள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை சங்கதிகளை நான் ஒப்புக் கொண்டுள்ளேன். எனக்கு தனியாக வழக்குரைஞர் ஆஜராகி இந்த வழக்கை நடத்தி வருகிறார். வழக்கு விபரங்கள் எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும் என்றால் சரிதான். 2020ல் எனக்கு திருமணம் ஆனது. நான் Diplomo Electronic Communication என்ற படிப்பை செந்தூரன் பாலிடெக்னிக் கல்லூரி, புதுக்கோட்டையில் படித்திருக்கிறேன். அது தனியார் கல்லூரி என்றால் சரிதான். என் தகப்பனார் விபத்தில் இறந்த இழப்பீட்டு வழக்கு நாளது தேதியில் நிலுவையில் இருந்து வருகிறது. முத்துராமன் நாயுடுவை எனக்கு தெரியும். வாதி தன்ராஜ் முத்துராமன் நாயுடுவின் மகன் என்று வீட்டில் சொல்லி தெரிந்து கொண்டேன். பொற்சரவணன் என்பவர் எனக்கு தாய்மாமன் ஆவார். மூன்றாம் பிரதிவாதி செல்வி அபிராமி MBA படித்து இருக்கிறார். செல்வி அபிராமி என்னுடைய தங்கை அரசு கலைக்கல்லூரி புதுக்கோட்டையில் BCA படித்தார். MBA படிப்பும் அழகப்பா பல்கலைகழகத்தில் படித்தார். அறந்தாங்கியில் இருந்து கல்லூரிக்கு தினமும் போய் வந்துதான் படித்தார். என் தாயர் மற்றும் என் சகோதரி நான்காம் பிரதிவாதி என் பாட்டி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை சங்கதி குறித்து எனக்கு தெரியும். முத்துராமன் நாயுடுவை எனக்கு நன்கு தெரியும் என்றாலும் எங்களுடைய படிப்பு செலவு மற்றும் குடும்ப செலவிற்காக கடன் வாங்கி கொண்டு தான் நாங்கள் அவருக்கு அடமானப்பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

நான் செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் 2013 –ல்ஆகஸ்ட் மாதத்தில் சேர்ந்தேன். 3 ம் பிரதிவாதியான என் தங்கை செல்வி அபிராமி புதுக்கோட்டையில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் BCA படிப்பிற்கு 2014 ல் சேர்ந்தார். என்னுடைய சகோதரி செல்வி அபிராமி 2017 ம் ஆண்டு காரைக்குடி அழகப்பா பல்கலைகழகத்தில் சேர்ந்தார்.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*